FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173-BNSS

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)

BNSS மாவது 173-ன் கீழ்

(குற்ற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8165121 09/AC/2026

1. District : மாவட்டம் கரூர் | PS: இனா.த.க.மாவது காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் | Date: நாள்

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED IN | Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: 2018. | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 22.09.2026 | Date to : நாள் வரை 15.00 மணிமுதல் 22.00 மணிவரை
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.09.2026 | Time : நேரம் 11.00 HRS

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.09.2026 | Time : நேரம் 11.00 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் நடப்பு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 40 கி.மீ கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கிளித்தலை கோராட்சி ஆணையர் அலுவலகம் கிளித்தலை கரூர் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. கலீபனா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. கோவிந்தசாமி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1984 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் உதவியாளர் | (g) Address : முகவரி உதவி செயற் பொறியாளர் அலுவலகம் (வே.மா) கிளித்தலை. கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. S. சிவகுமார். S/o சுப்ரமணியன். மேலாளர் கிளித்தலை கோராட்சி அலுவலகம். கிளித்தலை. கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாள்

கிழ்டன் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P.K. மோகன் Rank தா.கு.தலைமைக்காவலர் to take up the investigation / Refused Investigation / transferred to PS. மேல்.த.கி.காவ. நிலை.ர.on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.9.2026.

24/09/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.09.2026 AT 11.45 HRS

Name: பெயர் ந. அழகானந்தன்
Rank: நிலை தலைமைக்காவலர் No. எண் .....
மேல். த. கி. காவ. நிலை.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.05/AC/2026

u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

எதிரி:

திரு.S.சிவலிங்கம், வயது 55/2026
த/பெ.சுப்பிரமணியன்,
மேலாளர்,
குளித்தலை நகராட்சி,
கரூர் மாவட்டம்.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் குளித்தலை நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் ஆணையர் மற்றும் பணியாளர்கள் குளித்தலை நகராட்சியில் அரசு திட்டப்பணிகளை செயல்படுத்தும் ஒப்பந்ததாரர்களுக்கு பகுதி மற்றும் இறுதி பட்டியல் தொகையை வழங்கவும், கட்டிட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் சம்மந்தமாக பொதுமக்களிடம் இருந்து ஆன்லைன் மூலமும் மற்றும் நேரடியாகவும் பெறப்படும் மனுக்கள் மீது கள ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் 22.09.2026 ஆம் தேதி 15.00 மணிமுதல் 22.00 மணி வரை நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் திருமதி.G.கல்பனா, உதவியாளர், வேளாண்மை பொறியியல் துறை, உதவி செயற்பொறியாளர் அலுவலகம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் 24.09.2026 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு கொடுத்த புகார் மனுவை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களிடம் தக்க அறிவுரை பெற்ற பின்னர், இன்று 24.09.2026 ஆம் தேதி காலை 11.45 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/AC/2026 பிரிவு 7 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் கீழ் முதல் தகவல் அறிக்கையில் மார்ஜினில் கண்ட எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: திருமதி.G.கல்பனா, உதவியாளர், வேளாண்மை பொறியியல் துறை, உதவி செயற்பொறியாளர் அலுவலகம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, பொருள் : 22.09.2026-ம் தேதியன்று கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் குளித்தலை நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டபோது அங்கு பணியாற்றும் மேலாளர் திரு.சிவலிங்கம் என்பவரின் ஜிபே செயலியின் மூலம் நடைபெற்ற சந்தேகத்திற்குரிய பணப்பரிவர்த்தனை ரூ.4,02,000/- மற்றும் ஆவணத்தை மேல் நடவடிக்கைகாக ஒப்படைத்தல் தொடர்பாக. பார்வை : திடீர் சோதனையின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 22.09.2026. நான் 22.09.2026-ம் தேதியன்று அலுவலகத்தில் பணியில் இருந்த போது, எனது அலுவலக உதவி செயற்பொறியாளர் அவர்கள் என்னிடம் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொள்ள அரசு சாட்சி தேவைப்படுவதாகவும் அதற்காக என்னை கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்துக்கு நேரில் சென்று காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்யுமாறும் கேட்டுக் கொண்டதன் பேரில், நான் மதியம் 13.00 மணியளவில் கரூர்

ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு நேரில் வந்து அறிக்கை செய்தேன். அப்போது தாங்கள் கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் குளித்தலை நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் ஆணையர் மற்றும் பணியாளர்கள் குளித்தலை நகராட்சியில் அரசு திட்டப்பணிகளை செயல்படுத்தும் ஒப்பந்ததாரர்களுக்கு பகுதி மற்றும் இறுதி பட்டியல் தொகையை வழங்கவும், கட்டிட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் சம்மந்தமாக பொதுமக்களிடம் இருந்து ஆன்லைன் மூலமும் மற்றும் நேரடியாகவும் பெறப்படும் மனுக்கள் மீது கள ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் மேற்குறிப்பிட்ட குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளும்போது அரசு தரப்பு சாட்சியாக உடனிருக்குமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் நானும் இணைந்து மதியம் சுமார் 14.00 மணியளவில் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு சுமார் 15.00 மணிக்கு குளித்தலை பெரியார் நகர், ஜெய் மஹால் அவென்யூ இரண்டாவது குறுக்கு சாலையில் வடக்கு பார்த்த நுழை வாயிலுடன் தற்காலிக அலுவலகத்தில் இயங்கிவரும் குளித்தலை நகராட்சி அலுவலகத்திற்கு வந்து, அங்கு பணியில் இருந்த அலுவலக பணியாளர்களை விசாரித்தபோது குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.M.சுதர்சன் அவர்கள் இன்று மதிய உணவிற்கு சென்றுவிட்டு இன்னும் அலுவலகம் வரவில்லை என்று கூறினார்கள். எனவே காவல் ஆய்வாளரும், நானும் அங்கிருந்த அலுவலக பணியாளர்களிடம் எங்களை அறிமுகம் செய்துகொண்டு தொடர்ந்து அனைவரையும் அவரவர் இருக்கை பணியை தொடருமாறு அறிவுறுத்தி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ள வந்த விபரத்தை தெரிவித்து, திடீர் சோதனை மதியம் 15.00 மணிக்கு தொடங்கப்பட்டது. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.M.சுதர்சன் அவர்கள் அலுவலகத்திற்கு மதியம் சுமார் 3.15 மணிக்கு ஆஜரானார். அவரிடம் எங்களை அறிமுகம் செய்துகொண்டோம். நகராட்சி ஆணையர் அலுவலக அறையானது தென்கிழக்கு மூலையில் வடக்கு பார்த்தவாறு 11x11 அடி அளவு கொண்டதாக இருந்தது. ஆணையரின் இருக்கை ஒரு Executive டேபிள் ரோலிங் சேரானது வடக்கு பார்த்தவாறு இருந்தது. அவரது இருக்கைக்கு வலதுபுறம் கம்யூட்டர் டேபிள் பிரின்டருடன் இருந்தது. அதன்பிறகு, நகராட்சி ஆணையரின் Executive டேபிள் மற்றும் அலுவலக அறையை சோதனை செய்தபோது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை.

நகராட்சி ஆணையர் திரு.M.சுதர்சன் அவர்கள் தான் குளித்தலை நகராட்சி ஆணையராக கடந்த 02.03.2026 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அந்த அறைக்கு அடுத்ததாக மேற்குபுறமாக சுமார் 11x11 அடி அளவில் சேர்மன் அறை அமைந்துள்ளது. அதனை தற்போது உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினர் (Local Fund Audit) ஆய்வாளர் திரு.க.செல்வராஜ் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.வீ.சண்முகம் ஆகியோர் கடந்த ஜூலை மாதம் முதல் தணிக்கை செய்துகொண்டிருந்தனர். மேற்படி அறையை சோதனை செய்த போது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. அந்த அறைக்கு அடுத்ததாக

மேற்குபுறமாக அசிஸ்டன்ட் புரோகிராமர் அறையானது சுமார் 11x11 அடி அளவில் உள்ளது. அதனில் வடக்கு பார்த்தவாறு மூன்று கணினிகளும் இரண்டு HP பிரிண்டரும் காணப்பட்டது. வடகிழக்கு மூலையில் ஒரு இரும்பு பீரோ ஒன்றும், அதற்கு மேல் பயன்படுத்தப்பட்ட ஒரு கணினி ஒன்றும் காணப்பட்டது. மேற்படி அறையை சோதனை செய்த போது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. அந்த அறைக்கு அடுத்ததாக நகராட்சி பொறியாளர் அறையானது 11x11 அடி அளவில் உள்ளது. மேற்படி அறையில் தென்மேற்கு மூலையில் ஒரு இரும்பு பீரோவும், வடக்கு பார்த்து அமரும் வகையில் s டீப் சேருடன் கூடிய மேசை ஒன்றும் உள்ளது. மேற்படி அறையில் பணியில் இருந்த நகராட்சி பொறியாளர் திரு.தியாகராஜன் அவர்களின் உடைமைகளையும் அலுவலக அறையையும் சோதனை செய்த போது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. அதற்கு அடுத்தாற்போல் திறந்த நிலையில் உள்ள அலுவலகத்தில் இரும்பு பீரோக்கள் 6, அலுவலகத்தை காலி செய்தபோது எடுத்த வந்த பழைய கோப்புகள் காணப்பட்டது. மேற்படி அறையின் மேற்கு பக்கம் கிழக்கு பார்த்தவாறு என்ஜினியர் பிரிவும் அதில் வரைவாளர் திரு.சுபின், எழுத்தர் திரு.லோகேஷ்வரன், பணிஆய்வர் செல்வி திவ்யபாரதி, ஆகியோர்கள் ஆஜரில் இருந்தனர் அவர்களின் இருக்கைகளை சோதனை செய்தபோது கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை.

அதற்கு அருகில் நகரமைப்பு ஆய்வர் திருமதி.ரேவதி என்பவரின் இருக்கை உள்ளது. நகரமைப்பு ஆய்வரின் இருக்கையின் சோதனை செய்தபோது கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. அதனை தொடர்ந்து நகரமைப்பு ஆய்வர் அவர்களின் இருக்கைக்கு முன்பாக நகராட்சி மேலாளர் திரு.சிவலிங்கம் அவர்களின் இருக்கை காணப்பட்டது. அவருடைய இருக்கை பகுதியை சோதனை செய்தபோது கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. அப்போது மேலாளர் சிவலிங்கம் பயன்படுத்தும் தொலைபேசி எண். 9940295346 மூலமாக பயன்படுத்தும் ஜிபே செயலியை சோதனை செய்தபோது அதில் குறிப்பாக கடந்த மார்ச் -2026 முதல் 22.09.2026 வரை உள்ள காலகட்டதில் நடைபெற்ற பணப்பரிவர்த்தனை ரூ.4,02,000/- நடைபெற்றது தெரியவந்தது. மேலும் திரு.சிவலிங்கத்திடம் பணப்பரிவர்த்தனை பற்றி விசாரித்தபோது அவர் முன்னுக்குபின் முரணாக பதிலளித்தார். அதனை பற்றி விசாரித்து அவரிடம் தனியாக வாக்குமூலம் பெறப்பட்டது. அதற்கு அடுத்ததாக அறையின் வடக்கு பக்கத்தில் தெற்கு பார்த்தவாறு வரிசையாக பொது பிரிவும் உள்ளது. பொது பிரிவு அலுவலர்கள் மேற்கிருந்து கிழக்காக இளநிலை உதவியாளர் திரு.சங்கர்குமார் இருக்கையும், இளநிலை உதவியாளர் எப்1 நகரமைப்பு எழுத்தர் திருமதி.இந்திராதேவி என்பவரின் இருக்கையும் அதனை அடுத்து வருவாய்பிரிவு ஏ1 இளநிலை உதவியாளர் திரு.நந்தகுமார் என்பவரின் இருக்கையும், அதனை அடுத்து பணியமைப்பு பிரிவு சி1 இளநிலை உதவியாளர் திருமதி.யசோதாதேவி என்பவரின் இருக்கையும், வெளிகொணர்வு பணியாளர்கள், திருமதி.லீனா,

திருமதி.நிவேதா, திருமதி.ஜோதி ஆகியோர்களின் இருக்கையும் அமைந்துள்ளது. மேற்சொன்ன அனைத்து அலுவலர்களின் இருக்கை பகுதிகள், அங்கிருந்த 10 பீரோக்களை சோதனை செய்த போது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. மேலும் குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் நிறுத்தப்பட்டிருந்த நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் ஆகியோர் பயன்படுத்தும் அரசு வாகனங்களை சோதனை செய்யப்பட்டது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் காணப்படவில்லை. மேலும் நகராட்சி ஆணையர் அவர்களை விசாரித்தபோது தற்போது நகராட்சி அலுவலக கட்டிடம், காவேரி ஆற்றுப்படுகை பரிசல்துறை பகுதியில் கிணறு அமைக்கும் பணி, பெரியார் நகர் பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை தற்போது ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார். இந்த சோதனையின் போது மேற்படி நகராட்சி ஆணையர் திரு.சுதர்சன் அவர்களை சந்திப்பதற்காக நகராட்சி அலுவலகம் வந்த குளித்தலை வட்டம், இரணியமங்கலம், வலையபட்டி கிராமத்தை சேர்ந்த திரு.B.மோகன், த/பெ.பாலகிருஷ்ணன் என்பவரை சோதனை செய்தபோது அவர் தனது பேண்ட்டின் இடது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.51,000/- பற்றி விசாரித்தபோது அவர் கிருஷ்ணராயபுரம் கட்டாரபட்டியை சேர்ந்த கோபால் என்பவருக்கு கடந்த வாரம் கொடுத்த தொகையை திரும்ப பெற்றுகொண்டு வீட்டிற்கு செல்லும் வழியில் குளித்தலை நகராட்சி அலுவலகத்திற்கு வந்ததாகவும், நகராட்சி அலுவலகத்தில் தனது அண்ணன் மகன் வினோத் என்பவரது மகள் மதுக்ஷராவின் பிறப்பு சான்றிதழ் ஆன்லைனில் வரவில்லை என்றும் பிறப்பு சான்றிதழில் தாய் தந்தையின் இன்சியல் இல்லை என்பதால் எவ்வாறு சேர்ப்பது என்பது குறித்து கேட்க வந்ததாக கூறினார். திரு.மோகன் அவர்களின் விளக்கம் ஏற்றுகொள்ளதக்க வகையில் இருந்ததால் மேற்படி தொகை ரூ.51,000/- அவர் வசமே திரும்ப ஒப்படைத்தேன்.

இந்த திடீர் ஆய்வின் போது அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களும் அவர்கள் வைத்திருந்த தொகைகள் விபரம் பின்வருமாறு.

வ.எண்	பெயர்/பதவி	காணப்பட்ட தொகை (ரூபாய்)
1.	திரு.D.நந்தகுமார், இளநிலை உதவியாளர்	260/-
2.	திரு.A.சங்கர்குமார், இளநிலை உதவியாளர்	40/-
3.	திருமதி.B.யசோதாதேவி, இளநிலை உதவியாளர்	100/-
4.	திருமதி.ஜோதி. தற்காலிக பணியாளர்	50/-
5.	திருமதி.நிவேதா, தற்காலிக பணியாளர்	60/-
6.	திருமதி.இந்திராதேவி, சமுதாய அமைப்பாளர்,	100/-

7.	திரு.R.பாரதிசெல்வன், அலுவலக உதவியாளர்	800/-
8.	திருமதி.சத்தியா, தற்காலிக பணியாளர்	100/-
9.	திருமதி.ரேவதி, நகரமைப்பு ஆய்வாளர்	50/-
10.	திரு.S.சிவலிங்கம், மேனேஜர்	1,110/-
11.	செல்வி.திவ்யபாரதி. பணிஆய்வர்	70/-
12.	திரு.M.சுபின், வரைவாளர்	150/-
13.	திரு.M.விஜயகுமார், அலுவலக உதவியாளர்,	2,200/-
14.	திரு.S.சண்முகம் S/o. சங்கரன், 332-B, முதலியார் தெரு, அக்குமாபேட்டை, சங்ககிரி, சேலம்.	200/-
15.	திரு.K.செல்வராஜ், ஆய்வாளர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை	200/-
16.	திரு.V.சண்முகம், உதவி ஆய்வாளர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை	450/-
17.	திரு.T.வீரக்குமார், டிரைவர்	80/-
18.	திரு.M.லோகேஸ்வரன், இளநிலை உதவியாளர்	200/-
19.	திரு.K.தியாகராஜன், நகராட்சி பொறியாளர்	350/-
20.	திரு.K.மணிகண்டன்,துப்புரவு பணியாளர் சூப்பர்வைசர்	3,100/-

மேற்சொன்ன வரிசை எண்.1 முதல் 20 வரை உள்ள தொகைகள் அவர்களின் சொந்த தொகைகள் என்றும், இன்று காலை அலுவலகம் வந்தபோது செலவுக்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார்கள். இருப்பினும் அலுவலகத்தில் தனி நபர் கையிருப்பு பதிவேடு முறையாக பராமரிக்கபடவில்லை. பணியாளர்களின் விளக்கம் ஏற்றுகொள்ளதக்க வகையில் இருந்ததால் மேற்படி தொகைகளை அலுவலர்கள் வசமே திருப்பி ஒப்படைத்தேன்.

பின்னர் இதே அலுவலகத்தின் கணினி வரி வசூல் பிரிவு குறித்து நகராட்சி ஆணையர் திரு.சுதர்சன் அவர்களை விசாரிக்க மேற்படி பிரிவானது பழைய அரசு மருத்துவமனை கடை தெருவில் இயங்கி வருவதாக தெரிவித்ததன் பேரில் தற்காலிக அலுவலகத்தில் காவல் நியமித்த பின், அரசு சாட்சி மற்றும் காவல் குழுவினருடன் பழைய அரசு மருத்துவமனை கடை தெருவில் இயங்கி வரும் வரிவசூல் பிரிவிற்கு சென்று சோதனை செய்த போது அங்கிருந்த பணியாளர் திரு.சுரேஷ், காசாளர் அவரது இருக்கையில் இருந்தார். அவரிடம் காவல் ஆய்வாளர் தன்னையும், அரசு சாட்சியாகிய என்னையும் மற்றும் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டார்.

அலுவலகத்தின் மெயின் கேட்டானது தெற்கு பார்த்தும் கணிணி வரி வசூல் கட்டிடமானது மேற்கு பார்த்தவாறு இரண்டு அறைகளுடன் உள்ளது. அலுவலகத்தின் நுழைவாயிலிருந்து வலது பக்கம் காசாளர் அறையும் இடது பக்கம் பில் கலெக்டர் அறையும் உள்ளது. இரண்டு அறைகளும் சுமார் (10X15) என்ற அளவில் உள்ளது. பில் கலெக்டர் அறையில் 3 இரும்பு பீரோவும், 3 டேபிள் மற்றும் 5 நாற்காலிகள் உள்ளது. காசாளர் அறையில் 2 இரும்பு பீரோவும், 4 டேபிள் மற்றும் 5 நாற்காலிகள் உள்ளது. மேலும் இரண்டு கணிணி மற்றும் 2 பிரிண்டர்கள் மற்றும் இரும்பு பணப்பெட்டகம் காணப்பட்டது. இரும்பு பணப்பெட்டகத்தை சோதனை செய்தபோது பணம் ரூ.32,878/- இருந்தது. அவற்றை பற்றி திரு.சுரேஷ் அவர்களை விசாரித்தபோது மேற்படி பணத்திற்குரிய முறையான வரி வசூல் செய்த கணிணி ரசீது வைத்திருந்ததால் மேற்படி தொகையை திரும்ப அவர் வசமே ஒப்படைத்தேன். மேலும் திரு.சுரேஷ் என்பவரின் உடைமைகள் மற்றும் அலுவலக அறையை சோதனை செய்தபோது அங்கு கைப்பற்றக்கூடிய வகையில் பணம் மற்றும் ஆவணங்கள் ஏதுமில்லை.

காசாளர் அறை சோதனையின் போது அங்கு வந்த பில் கலெக்டர் திரு. ரமேஷ், துப்புரவு ஆய்வாளர் திரு.சரவணன் அவர்களை சோதனை செய்த போது அவர்கள் வசம் பணம் ஏதுமில்லை. துப்புரவு ஆய்வாளர் திரு.சரவணன் அவர்களை விசாரிக்க தனது அலுவலகமானது குளித்தலை மீன்காரத் தெருவில் பழைய ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும் டெங்கு பணியாளர் மற்றும் பரப்புரையாளர்களுக்கு அறிவுரை வழங்க அங்கு வந்ததாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து காசாளர், பில்கலெக்டர் அலுவலக அறை மற்றும் சுகாதார ஆய்வாளர் திரு.சரவணன் அவர்களின் சொந்த வாகனம் TN 60 AU 8579 ஆகியவற்றை சோதனை செய்தபோது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை.

காசாளர் அறை, சோதனை முடித்தபின்பு மீண்டும் தற்காலிக அலுவலகம் வந்து நகராட்சி ஆணையர் அவர்களிடம் இன்றைய தேதி 22.09.2026-ல் அனைத்து பிரிவு அலுவலர்கள் மேற்கொள்ளும் பணிகளின் தற்போதைய நிலுவையில் உள்ள கோப்புகளின் பட்டியல் விபரம் கேட்டபோது அவர் இளநிலை உதவியாளர் திருமதி.யசோதாதேவி அவர்களின் லாக் இன் ஐடி மூலமாக பார்வையிட்டு குளித்தலை நகராட்சியில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் மொத்தமாக 253 கோப்புகள் உள்ளது என்றும் அதனை டவுன்லோடு செய்து பிரின்ட் எடுத்து கொடுத்த நகலில் 1 முதல் 40 பக்கம் வரை சான்றொப்பம் செய்து விசாரணைக்காக வழங்கினார். அதனை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

அதில் தனது பிரிவில் ஒரு கோப்பு மட்டும் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார். மேற்படி கோப்பானது டிசம்பர் 2025 ற்குரியது என்றும், தான் இந்த அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்தது 17.02.2026-ம் தேதி என்றும் அதற்கு முன்பே இந்த கோப்பானது நிலுவையில் உள்ளது என்றும், சில நேரங்களில் சர்வர் வேகம் குறைவாக இருக்கும் போது செய்யும் பதிவுகள் நிலுவையில் இருக்கும் என்றும், தனது பிரிவில் தற்போது கோப்புகள் எதுவும் நிலுவையில் இல்லை என்று

தெரிவித்தார். நிலுவையில் உள்ள விண்ணப்ப கோப்புகள் அலுவலக கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து கொடுத்ததில் அவரும், நகராட்சி ஆணையர், அரசு சாட்சி மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் பக்கதிற்கு பக்கம் கையொப்பம் செய்து ஆய்வாளரால் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் இந்த நடவடிக்கையின்போது, குளித்தலை நகராட்சி ஆணையர் அலுவலக உட்புற மற்றும் வெளிப்புற பணியாளர்களின் வருகைப்பதிவேடு-2026 பக்கம் 1 முதல் 6 வரை சான்றொப்பமிட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றினேன். குளித்தலை நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கடந்த 18.09.2026 முதல் 22.09.2026 வரையிலான நாட்களில் தங்களது பணம் கையிருப்பு விபரங்களை தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. மேற்படி பணம் தினசரி கையிருப்பு பதிவேடு பக்கம் எண். 49 மற்றும் 50 ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகலின் 2 பக்கங்கள் கைப்பற்றினேன்.

மேலும், குளித்தலை நகராட்சிக்கு கொடிநாள் நிதி இலக்கு ஏதேனும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்று நகராட்சி ஆணையர் அவர்களை கேட்டபோது அவர் அலுவலக F-1 பிரிவு கணக்காளர் திரு.சங்கர்குமார் என்பவர் மூலம் ஆஜர் செய்த கோப்பை பார்வையிட்டபோது, கடந்த 2026 ஆம் ஆண்டிற்கு ரூ.3 லட்சம் கொடிநாள் நிதி இலக்கும் மற்றும் ரூ.3,000/- காசநோய் வில்லை நிதி இலக்கும் நிர்ணயம் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, அதில் கடந்த 22.09.2026 ஆம் தேதி வரை மேற்படி கொடிநாள் நிதி இலக்கு நான்கு தவணைகளாக வரை ரூ.2,60,000/- வசூல் ஆன்லைன் மூலமாக பெறப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டு விட்டதாகவும், மீதமுள்ள இலக்கு ரூ.40,000/- நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், காசநோய் வில்லை நிதி இலக்கு ரூ.3000/- வசூல் செய்யப்பட்டு கடந்த 15.06.2026 அன்று அரசு கணக்கில் செலுத்தப்பட்டு விட்டதாக தெரிவித்தார். மேற்படி கொடிநாள் நிதி இலக்கு கணக்கு ஆவணம் பக்கம் 1 முதல் 16 வரை உள்ளதையும் மற்றும் காசநோய் வில்லை நிதி இலக்கு செலுத்தியதற்கான செலுத்தச்சீட்டு பக்கம் 1 முதல் 6 வரை எடுத்தும் அதில் நானும், திரு.சங்கர்குமார், F-1 பிரிவு கணக்காளர், நகராட்சி ஆணையர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் பக்கத்திற்கு பக்கம் கையொப்பம் செய்ததை விசாரணைக்காக கைப்பற்றினேன். இந்த திடீர் சோதனை நடவடிக்கை, அலுவலக ஆவணங்களுக்கோ, அலுவலர்களுக்கோ எந்தவித சேதாரமும், தொந்தரவுமின்றி நடத்தி முடிக்கப்பட்டதை எனது முன்பாக உறுதி செய்து கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கை கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட மடிக்கணினியில் காவல் ஆய்வாளர் அவர்கள் சொல்ல சொல்ல மாலை 15.00 மணி முதல் இரவு 22.00 மணி வரை தலைமை காவலர் 1619 திரு.லோகநாதன் அவர்களால் தட்டச்சு செய்து தயார்செய்யப்பட்டது. அதில் நானும், காவல் ஆய்வாளர் திரு.K.சாமிநாதன், குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.சுதர்சன், மேலாளர் திரு.சிவலிங்கம் ஆகியோர்கள் அனைத்துபக்கத்திலும், நகராட்சி பொறியாளர் திரு.தியாகராஜன், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை ஆய்வாளர் திரு.செல்வராஜ், சுகாதார ஆய்வாளர் திரு.சரவணன் ஆகியோர்கள் கடைசி பக்கத்திலும் கையொப்பம் செய்தோம். 23.09.2026 ஆம் தேதியன்று டிஜிட்டல்

கிராப் சர்வே பணிக்காக சென்றுவிட்டதால் என்னால் வர இயலவில்லை. எனவே மேற்படி திடீர் சோதனை நடவடிக்கையின் போது கைப்பற்றிய ஆவணங்கள் மற்றும் குளித்தலை நகராட்சி மேலாளர் திரு.சிவலிங்கம் பயன்படுத்தும் தொலைபேசி எண். 9940295346-ல் இணைத்துள்ள ஜிபே செயலி மூலமாக நடைபெற்ற பணப்பரிவர்த்தனை ரூ.4,02,000/- ஆகியவற்றை குறித்து மேல் நடவடிக்கைக்காக இன்று 24.09.2026 ஆம் தேதி இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். மேற்சொன்ன பணப்பரிவர்த்தனை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- XXXXXXXXXX 22.09.2026 (கோ.கல்பனா, உதவியாளர், உ.செ.பொ (வே.பொ) அலுவலகம், குளித்தலை)

Sir, Received the Computer typed complaint on 24.09.2026 at about 11.00 hrs, after getting suitable instructions form the superior officers and law officers of DVAC, Chennai, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.09/AC/2026u/s7 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 11.45 hrs on 24.09.2026. Sd/- (XXXXXXXXXX) 24.09.2026 K.Saminathan, Inspr of Police, V & AC, Karur.

Original FIR along with the original computertyped complaint of Tmt.G.Kalpana, Assistant, O/o The Assistant Executive Engineer, Agricultural Engineering Department, Kulithalai Taluk, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

24/9/26

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.